**පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 290**

**ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - පුත්තලම**

පාර්ලිමේන්තුවේ රාජ්‍ය ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සහ ඒ සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරිම.

**பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இலக்கம் - 290**

**நிறுவனத்தின் பெயர் - மாவட்ட செயலகம் - புத்தளம்**

பாராளுமன்றத்தினால் அரசாங்க கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

**Parliamentary Series No: 290**

**Name of the Institution: District Secretariat - Puttalam**

**Submission of observations of Hon. Minister in charge of the Institutions and step taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119 (4)**

<u>அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான பொதுக் கணக்குகள் தொடர்பான குழுவினால் பாராளுமன்றம் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை முன்வைத்தல்.</u>

பாராளுமன்ற தொடர் இலக்கம் :- 290

மாவட்ட செயலகம் - புத்தளம்

| <u>பொதுக் கணக்குகள் தொடர்பான குழுவினால</u> சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | தற்போதைய முன்னேற்றங்கள் |
|---|---|---|
| பகுதி ஒன்று -<br>1. கணக்காய்வாளர் நாயகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக் கப்பட்டிருக்கவில்லை.<br>2. அகக் கணக்காய்வு விசாரணைகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்படாத சம்பவங்கள் பதிவாகியுள்ளன. | கணக்காய்வு கேள்விகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | பல்வேறு அரச நிறுவனங்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப விடயங்களைச் சரிபார்த்து விடையளிக்க வேண்டிய சமயங்களில் ஒரு மாதத்திற்குள் பதில் அளிப்பதில் சிரமம் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன. |
| 3. ஒரு வருடத்திற்கும் மேலான காலங்களுக்கான கடன் நிலுவைத் தொகைகள் இருந்தன. | நிலுவைத் தொகையை வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | சட்ட நடவடிக்கை தேவைப்படும் கோப்புகள் குறித்து சட்டமாஅதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. |
| பகுதி இரண்டு- | | |
| 01. 2018 சனவரி 24 என திகதியிட்ட 02/2018 பொது நிர்வாக சுற்றறிக்கையின் விதிகளின்படி உரிய முறையில் தயாரிக்கப்பட வேண்டிய மனித வளத்திட்டம் ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கவில்லை. | 02/2018 இன் படி, 2022 ஆம் ஆண்டிற்கான மனித வளத் திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்காவிடினும், மாவட்ட செயலகம் மற்றும் 16 பிரதேச செயலகங்களிலும் பயிற்சி உள்ளிட்ட பயிற்சித் திட்டம் தயாரிக்கப்படடிருந்தது 2023 ஆம் ஆண்டிலிருந்து மனிதவளத்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான மனித வளத் திட்டம் சுற்றறிக்கையின்படி தயாரிக்கப்பட்டுள்ளது. |
| 02. தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டம் மூலம் 50 சதவீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணிநேரத்திற்கு குறையாத பயிற்சி வாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்கப் பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் பயிற்சி வாய்ப்புகள் உத்தரவாதம் அளிக்கப்பட்டன, ஆனால் பொருளாதார நெருக்கடி காரணமாக அரச கடமைகளின் கட்டுப்பாடு மற்றும் 2023 ஆம் ஆண்டில் 01.∵.2023 மற்றும் 02.∵.2023 வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளின்படி செலவுகளைக் கட்டுப்படுத்துதல் மற்றும் 2024 ஆம் ஆண்டு தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 1.∵.2024 இன் பந்தி 5 இன் படி வழங்கப்படும் பயிற்சி வரையறுக்கப்பட்டதால் 02.∵. 2018 சுற்றறிக்கையின் படி பயிற்சியை நடத்த இயலாமல் போனது. | பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதானது, 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 01/2024 பந்தி 05 விதிகளின்படி செயற்படும். |

| | | |
|---|---|---|
| 03. முழு ஊழியர்களையும் உள்ளடக்கிய செயல்திறன் ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 முதல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. | 02/2018 சுற்றறிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| 04. மனிதவள மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் திறன் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் நிறுவனத்தில் பரிந்துரைக்கப்பட்ட சிரேட்ட அதிகாரி யாரும் இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டுள்ளார். | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டிற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். |
| 05. அடையாளம் காணப்பட்ட செயற்பணி குறிகாட்டியின் அடைவு 24% க்கும் குறைவாக இருந்தது. | கொவிட் தொற்றுநோய் சூழ்நிலையில் நாடு மூடப்படிருந்ததன் காரணமாக , 2021 இல் அடையாளம் காணப்பட்ட செயற்பணி குறிகாட்டிகள் தவறவிடப்பட்டாலும், செயற்பணி குறிகாட்டிகள் 2022 ஆம் ஆண்டில் அடையப்பட்டன. | 2022 ஆம் ஆண்டில், செயற்பணிக் குறியீடு 115% ஆக இருந்தது. |
| 06. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% க்கும் குறைவாக இருந்தது. | 2022 ஆம் ஆண்டில் பயிற்சி வாய்ப்புகள் உத்தரவாதம் அளிக்கப்பட்டன, ஆனால் பொருளாதார நெருக்கடி காரணமாக அரச செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டதால் மற்றும் 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகள் 01/2023 மற்றும் 02/2023 இன் படி செலவுகளைக் கட்டுப்படுத்துதல் காரணமாக மற்றும் 2024 ஆம் ஆண்டில் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 1/2024 இன் பந்தி 5 இன் படி வழங்கப்படும் பயிற்சி வரையறுக்கப்பட்டதாலும் 02 /2018 சுற்றறிக்கையின்படி பயிற்சியை நடத்த முடியாமல் போனது. | பொதுச் செலவினங்களை தொடர்பாக வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 01/2024 பந்தி 05ன் விதிகளின்படி செயற்படும். |
| 07. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>முந்தைய ஆண்டு தொடர்பான அறிக்கையின் பந்திகளின் குறிப்பு | | |
| 3.5(அ) திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டிய அரச விடுதிகளினை உரிய முறையில் திருத்தம் செய்து வருமானம் ஈட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். | வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகள் 01/2023 மற்றும் 02/2023 மற்றும் 01.:.2024 ஆகியவை பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்தியுள்ளன, எனவே அவசியமான திருத்த வேலைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. | ஆண்டு மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினை முன்னுரிமை அடிப்படையில் பயன்படுத்தி திருத்தப் பணிகளை மேற்கொள்தல். |

| | | |
|---|---|---|
| 3.5.(ஆ) தாமதமின்றி காணியினைப் பெற்று உரிய செயற்பாடுகளை நிறைவு செய்தல். | 2023.06.07 அன்று சம்பந்தப்பட்ட தரப்பினருடன் விசேட கலந்துரையாடல் இடம்பெற்று எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. | 04 புதிய உத்தியோகபூர்வ இல்லங்கள் நிர்மாணிப்பதற்கான மதிப்பீடுகள் 20.09.2023 அன்று புத்தளம் நகர சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| 3.7 (அ) 14வது விலைபட்டடியல் கொடுப்பனவு விதிமுறைகளின்படி மேற்கொள்ள வேண்டி இருந்த போது அதன்படி செயற்படாமல் விதிமீறல் காரணமாக வட்டி கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொள்முதல் நடைமுறைகளின்படி மற்றும் ஒப்பந்தத்தின்படி ஊழியர்கள் செயல்பட்டுள்ளனர். | கொள்முதல் சட்டத்தின்படி நடுவர் மன்றத்தின் வழிகாட்டுதலின்படி அதிகாரிகள் செயல்பட்டுள்ளனர். |
| 3.8 தொடர்புடைய பரிந்துரைகள் பெறப்பட வேண்டியது சாத்தியக்கூறு ஆய்வின் போது என்பதோடு மற்றும் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளின்படி உள்ளதா என்பதைக் கருத்தில் கொண்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் முறையான சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சாத்தியக்கூறு ஆய்வில் தேவையான பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| 3.9 (அ) மேலதிக கொடுப்பனவு பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டில், மாகாண விலைக் குழுக்களின் முடிவுகளின் மீது நடவடிக்கை எடுக்க வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி ஊழியர்கள் செயல்பட்டுள்ளனர். மேலதிக கொடுப்பனவு இடம் பெறவில்லை. | அரையாண்டு விலை நிர்ணயக் குழுக்கள் நடாத்தி முடிவெடுக்கின்றன. |
| 3.9 (ஆ) வினைத்திறன்மிக்கதாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதி அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் பேரில் அரசுக்கு கிடைக்க வேண்டிய அரிசிக்கான பெறுமதி தொகை காசாக வசூலிக்கப்படுகிறது. | தொடர்ந்து காலதாமதம் செய்யும் ஆலை உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. |

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
புத்தளம்

H.M.S.P. HERATH
District Secretary/Government Agent
Puttalam District

பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
புத்தளம்

[illegible]
CHIEF ACCOUNTANT,
DISTRICT SECRETARIAT,
PUTTALAM.

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்